11th February 1959]

SRI N. MARUDACHALAM : கோவை மில் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் எதாவது உண்டா? அப்படியானல் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவையில் கோவாப்பரேட்டிவ் இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங் ஸ்கீம் பிரகாரம் 144 வீடுகள் கட்ட திட்டம் போட்டு, அதற்கு அஸ்திவாரக் கல் போட்டு அது அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு தொழிலாளர்களுக்குள் முன் பணம், டெப்பாஸிட் பணம் கொடுத்து அந்தக் கட்டிடங்களை கட்ட முன்வரவில்லை என்று புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் இதில் சற்று ஊக்கம் எடுத்துக்கொண்டால் 144 வீடுகளை சீக்கிரம் கட்டி முடிக்கலாம்.

SRI T. M. NALLASWAMI : இந்தத் திட்டத்தின் கீழ் "புகளூர்" சர்க்கரை ஆலையில் வேலை செய்யும் 600 தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டும் அத்திட்டத்திற்காக அந்த ஆலையைச் சேர்ந்தவர்கள் நிலம் ஒதுக்கியும் அந்த வேலை ஆரம்பிக்க முடியாமல் இருந்து வருகிறது. அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 55 லட்சம் ரூபாய்க்கும் ஸ்கீம்கள் எல்லாம் போட்டு முடிந்துவிட்டது. இனி பணமில்லை. மத்திய அரசாங்கத்தினிடம் இன்னும் அதிகம் கேட்டிருக்கிறோம். வந்தால் பிறகு யோசனை செய்யலாம்.

SRI K. SATTANATHA KARAYALAR : நெசவுத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு முறையில் கட்டிக் கொடுத்திருக்கும் வீடுகள் இதைப் பார்க்கிலும் வசதியாகவும் சிக்கனமாகவும் கட்டப்பட்டிருக்கிறதை சர்க்கார் பரிசீலனை செய்ததா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆமாம் அவர்களுக்கு 1/3 சப் ஸிட்டி கிடைக்கிறது. இதில் சப் ஸிட்டி 25 சதவிகிதம்தான்.

Guest House at Cape Comorin

* 236 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Guest House at Cape Comorin is let out for the use of Ministers and V.I.Ps only; and

(*b*) whether there is any proposal to allow M.L.As. to occupy Guest House at Cape Comorin whenever it is not occupied by V.I.Ps and Ministers?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) The M.L.As. can occupy it whenever it is not occupied by V.I.Ps., Ministers, etc.

SRI T. S. RAMASWAMY PILLAI : எஸ்ட்டிமேட் கமிட்டி, பப்ளிக் அக்கௌண்ட் கமிட்டி போன்ற கமிட்டிகளில் எம். எல். எக்கள் இங்கிருந்து போனபோது ரெஸிடன்ஸ் கேட்கப்பட்டும் அவர்களுக்கு "அனக்ஸ்"தான் கொடுத்திருந்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ? இதுபற்றி புகார் எதாவது வந்ததா?

THE HON. SRI P. KAKKAN : அப்படி தகவல் எனக்கு வரவில்லை.

Railway line to the south via Aranthangi-Karaikudi

* 237 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து மீட்டர்கேஜ் மெயின் லைனில் அறந்தாங்கி-காரைக்குடி வழியாகத் தெற்கே நேரே வண்டி போக்குவரத்தை நடத்தும்படி மத்திய ரயில் இலாகாவிற்கு நம் மாநில அரசாங்கம் சிபாரிசு ஏதேனும் செய்துள்ளதா?